செய்தி வெளியீடு **நாள் : 04.11.2023**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவு திட்டமான "வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்" ஒரு பகுதியாக வடசென்னை இளைஞர்களின் திறன் பயிற்சிக்காகவும் மற்றும் கூடுதல் வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் "திறன் மேம்பாட்டு பயிற்சி மையம்" அமைப்பது தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு .

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவு திட்டமான "வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்" ஒரு பகுதியாக இன்று (4.11.2023) சென்னை, நம்மாழ்வார்பேடை, அரசு தொழில்நுட்ப கல்லூரியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பிலும் வடசென்னை இளைஞர்களின் திறன் பயிற்சிக்காகவும் மற்றும் கூடுதல் வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் "திறன் மேம்பாட்டு பயிற்சி மையம்" அமைப்பது தொடர்பாக மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (03.11.2023) சென்னை தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2023-2024 ஆம் ஆண்டு அறிவித்த திட்டமான **ரூ.1000 கோடி மதிப்பீட்டில் "வடசென்னை வளர்ச்சித் திட்டம்"** குறித்து சம்மந்தப்பட்ட துறை அரசு செயலாளர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக இன்று (4.11.2023) சென்னை, நம்மாழ்வார்பேடை, அரசு தொழில்நுட்ப கல்லூரியில் "வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்" ஒரு பகுதியாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் சார்பில் வடசென்னை இளைஞர்களின் திறன் பயிற்சிக்காகவும் மற்றும் கூடுதல் வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் **"திறன் மேம்பாட்டு பயிற்சி மையம்"** அமைப்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்க ஓர் திட்டம். அதிக வேலை வாய்ப்புகள் உருவாக்கக்கூடிய பாலிடெக்னிக், ஐ.டி.ஐ போன்ற படிப்புகள் மூலம் வேலைவாய்ப்புகள் உருவாகும். இப்பாலிடெக்னிக் கல்லூரியில் தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகள், அடிப்படை தேவைகள், மாணவர்கள் பயிலும் வகுப்பறைகளை மேம்படுத்துதல், அதற்குண்டான உபகரணங்கள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி போன்றவைகள் குறித்து இன்றைக்கு

Verified RealEstate ™

துறை சார்ந்த செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்களும், உறுப்பினர் செயலாளர் திரு.அன்சூல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களும், பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி அவர்களும், ஆணையாளர் டாக்டர்.ராதாகிருஷ்ணன் அவர்களும், அதேபோல் ஐஏஎஸ் அதிகாரிகள் திருமதி.திவ்யா அவர்களும். மாநகராட்சி ஆர்டிசி சென்ட்ரல் திரு.பிரவீன் அவர்களுடனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொழில் பயிற்சிக்காக திறன் மேம்பாட்டு சார்பில் தையல் பயிற்சியும், கணினி பயிற்சியும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இப்பாலிடெக்னிக் கல்லூரியில் தொடங்குவதற்கு இக்கல்லூரி முதல்வர் அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்கு கீழே அதிகமாக மக்கள் வசிக்கின்ற பகுதி என்பதால் பயனுள்ள ஒரு செயலாக இந்த செயல் அமையும் என்பது நம்பிக்கையோடு இருக்கிறோம். இந்த தொழில் பயிற்சிக்கு வருபவர்களுக்கு தொழில் பயிற்சி முடித்தவுடன் சான்றிதழும், தொழில் பயிற்சி வருகின்றவர்களுக்கு ஊக்க தொகையும் வழங்கபட இருக்கின்றது. அதுவே இது ஒரு அரிய வாய்ப்பாக பயன்படுத்தி இந்த பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** உத்தரவோடு இந்த பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட இருக்கின்றன.

மேலும் இந்த பாலிடெக்னிக்கு தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தி தர முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. துறை சார்பில் தருகின்ற நிதியையும், அதேபோல் கூடுதலாக சி.எஸ்.ஆர். பணத்தையும் (CSR Fund) பெற்று இந்த கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இருக்கிறோம். இந்த கட்டித்திலேயே இருக்கின்ற இந்த கேம்பஸ் 5.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் என்பதால் பயன்பாட்டில் இல்லாத இடத்தில் மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தேவைப்படுகின்ற கட்டமைப்புகளை உருவாக்கவும் திட்டமிட்டு இருக்கிறோம். இன்றைய ஆய்வின் தொடர்ச்சியாக இம்மாதம் நவம்பர் 13, 14, 15 ஆகிய மூன்று தேதிகளில் ஏதாவது ஒரு தேதியில் தொடர் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா அவர்கள், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மத்திய மண்டல துணை ஆணையாளர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ் குமார் அவர்கள், கல்லூரி முதல்வர் திருமதி.பெ.பவானி அவர்கள், சிஎம்டிஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.ருத்ரமூர்த்தி அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified © RealEstate™